www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 6th Term Examination – 2022

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் I<br>Christian Civilization I | Two Hours<br>Gr -13 (2022) | 49 | T | I |

**அறிவுறுத்தல்கள்:**
- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக
- 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட
விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விடைத்தாளில் புள்ளடி இடுக.

### பகுதி I

01) நாகரிகங்களில் மிகப் பழைமை வாய்ந்த நாகரிகமாக கருதப்படுவது.
1. பபிலோனியா 2. சுமேரியா 3. கிரேக்க
4. உரோமைய 4. அசிரிய

02) ஆட்சி அதிகாரம் கடவுளிடமிருந்தே வருகின்றது என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்கள்.
1. கிரேக்கர்கள் 2. பாலஸ்தீனர்கள் 3. பாரசீகர்கள்
4. மொசப்பெத்தேமியர்கள் 5. உரோமையர்கள்

03) யூதர்களின் வேத நூலாகிய எபிரேய விவிலியத்தில் (மசரோடிக்) செல்வாக்குச் செலுத்தாத அம்சமாக கருதப்படுவது.
1. இறையனுபவங்கள் சமூக வாழ்வு 2. அயல்நாட்டு பண்பாட்டு விழுமியங்கள்
3. தோல்பொருள் ஆய்வுகள் 4. இலக்கியங்கள்
5. வரலாறுகள்

04) எகிப்திய நாகரிகம் பற்றிய கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. உலகின் முதல் வரைபடம் இவர்களால் வரையப்பட்டது.
B. இது ஆபிரிக்கக் கண்டத்தில் மிசிறிக் பிரதேசத்தில் வளர்ச்சி அடைந்தது.
C. கனவுகளுக்கு பலன்கூறும் பழக்கம் இவர்களிடம் காணப்பட்டது.
D. மரணத்தின் பின் வாழ்வு உண்டு என்ற நம்பிக்கை இவர்களிடம் காணப்பட்டது.
E. ஆட்சி அதிகாரம் தெய்வத்திடம் இருந்தே அரசனுக்கு கிடைத்ததாக நம்பினர்.
மேற்குறித்த கூற்றுக்களுள் சரியானது.
1. ABC 2. BCD 3. ADE 4. BDE 5. BDE

05) கிரேக்கமொழி பற்றி பின்வரும் கூற்றுக்களுள் சரியான தொகுதியை தெரிவு செய்க.
A. கற்றோரின் மொழியாக அழைக்கப்பட்டது.
B. பல ஐரோப்பிய மொழிகளுக்கு தாய்மொழியாக விளங்கியது
C. இந்தோ ஐரோப்பிய மொழிகளுள் ஒன்றாக கருதப்பட்டது.
D. உரோமன் கத்தோலிக்க தலைமைப் பீடத்தின் நிர்வாக மொழியாகக் காணப்படுகின்றது.
E. உரோமைய பைசாந்திய பேரரசுகளில் இம் மொழி சிறப்புற்று காணப்படுகின்றது.
1. ACE 2. BCD 3. ABC 4. ADE 5. BDE



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

06) சாரோன் சமவெளி பற்றிய பிழையான கூற்று யாது?
1. இது கடற்கரைப் பகுதியின் மையப் பகுதியாகும்.
2. இங்கு ஒலிவ மரங்களும் தானிய வகைகளும் அதிகம் காணப்படும்.
3. இங்கு தான் யோப்பா நகரம் காணப்படுகின்றது.
4. இது கார்மேல் மலையிலிருந்து யோப்பாவரை நீளமுடையது.
5. இன்றைய நவீன நகரமான ரெல் அவில் இதன் பகுதியில் அமைந்துள்ளது.

07) பாலஸ்தீனாவின் மேற்கு மலைப்பகுதியில் அமையாத இடம்.
1. மேல்கலிலேயா 2. எருசலேம் 3. சமாரியா
4. கார்மேல் மலை 5. எப்ரோன்

08) இஸ்ராயேல் மக்களை யாரிடமிருந்து விடுவித்தமை சிம்சோனின் பிரதான பங்களிப்பாக கொள்ளப்படுகிறது?
1. எகிப்தியர் 2. ஏதோமியர் 3. பிலிஸ்தியர்
4. பெனிசியர் 5. அசிரியர்

09) "உன்னதரான இறைவன்", "உடன்படிக்கையின் இறைவன்", "என் ஆண்டவர்" என்ற பண்புகளினைக் குறிக்கும் கடவுளது பெயர்கள் முறையே
1. ஏல் எலியோன், ஏல்பெரித், அதோனாய்
2. ஏல்பெரித், ஏல்சடாய், ஏல்ஏலியோன்
3. யாவேயீரே, ஏல்பெரித், அதோனாய்
4. அதோனாய், ஏல்சடாய், ஏல்ஏலியோன்
5. ஏல்எலோகிம், ஏல்ஏலியோன், எல்சடாய்

10) A. இறைவார்த்தை வாசிப்பதற்கான பேச்சு மேடை காணப்படும்
B. அதிதூயகம் என்ற பகுதி காணப்பட்டது.
C. எருசலேம் நோக்கிய திசையிலே இது அமைக்கப்பட்டிருக்கும்
D. இங்கே பலிப்பீடம் காணப்படாது, விளக்குத் தண்டுகள் காணப்படும்.
E. அதிதூயகம் என்ற பகுதி திரைச்சீலையால் மறைக்கப்பட்டிருக்கும்.
மேற்படி கூற்றுக்களுள் தொழுகைக் கூடம் பற்றிய சரியான கூற்றுக்கள்.
1. ABCE 2. ABD 3. ACDE 4. BDE 5. ACD

11) யூதர்களின் அன்றாட செபமான "ஷேமா" குறித்து நிற்பது.
1. ஓய்வு 2. இறையன்பு 3. கடவுளுக்கு செவிகொடு
4. புகழுரை 5. இறைபுகழ்

12) பாவப்பரிகார பலி விழா கொண்டாடப்பட்ட காலம் எது?
1. புரட்டாதி – ஐப்பசி 2. பங்குனி – சித்திரை 3. ஐப்பசி – கார்த்திகை
4. தை – மாசி 5. சித்திரை – வைகாசி

13) "யோம் கிப்பூர்" என்பதன் பொருள்
1. அறுவடை விழா 2. ஆலய அர்ப்பண விழா 3. குழந்தை பிறப்பு விழா
4. பாவப்பரிகார பலிவிழா 5. ஆட்சியை பொறுப்பேற்கும் விழா

14) இறையாட்சியின் தன்மைகளை விளக்குவதற்கு இயேசு பயன்படுத்திய உவமைகளுள் பொருத்தமற்றது.
1. புளிப்பு மாவு 2. நல்ல சமாரியன் 3. விதைப்பவன்
4. புதையல் 5. வலை

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

15) இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு தொடர்பாக யோவான் நற்செய்தியில் வெளிப்படுத்தப்படுவது.
   1. மீட்பின் வெளிப்பாடு
   2. துன்புறுத்தலின் வெளிப்பாடு
   3. அலகையை வெற்றி கொண்ட வெளிப்பாடு
   4. இருளின் ஆதிக்கத்தின் மேல் வெற்றி கொண்ட வெளிப்பாடு
   5. இயேசுவின் உயர்ந்தபட்ச அன்பும், இறையாட்சியின் வெளிப்பாடும்.

16) யூதர்களின் அன்றாடம் பயன்படுத்தும் ''சலோம் அல்லேகும்'' என்ற வாழ்த்துச் செய்திக்கு இயேசு கூறிய விளக்கமாக அமைவது.
   1. எல்லோரும் வாழ்த்தப் பெறுவாராக
   2. கடவுள் உம்மோடு இருப்பாராக
   3. இறைவன உமக்கு எல்லாவித நன்மைகளையும் அளிப்பதாக
   4. உங்களுக்கு அமைதி உரித்தாகுக.
   5. ஆண்டவரை கண்டோம்.

17) இயேசவின் உயிர்ப்பு பற்றிய செய்தியை முதலில் எழுதியவர்.
   1. மத்தேயு 2. யோவான் 3. லூக்கா
   4. பவுல் 5. பேதுரு

18) திரு அவையில் முதல் நியமனம் பெற்ற பணியாளர்களைக் கொண்ட தொகுதி எது?
   1. ஸ்தேவான், பேதுரு, அந்திரேயா 2. ஸ்தேவான், பிலிப்பு, நிக்கொலா
   3. பிலிப்பு, அந்திரேயா, யூதா 4. பிலிப்பு, யோவான், பேதுரு
   5. பேதுரு, யோவான், யூதா

19) தூய பவுலின் முதலாவது மறைத்தூதுப் பயணத்தின் முக்கிய நிகழ்வாகக் கருதப்படுவது
   1. ஆளுனர் செர்க்கியு பவுல் மனமாற்றம் பெறுதல்
   2. பவுல் ஐந்து காட்சிகளை காணுதல்
   3. தெமேத்திரியு என்பவனின் தொல்லைக்குட்படுதல்
   4. அக்கில்லா, பிறிஸ்கிலாவுடன் இணைந்து நற்செய்தியை அறிவித்தமை
   5. ஐத்திரு என்ற இளைஞனை உயிர்ப்பித்தார்.

20) தூய பவுலின் எழுத்தாக்கங்களில் கிரேக்க தாக்கம் அதிகளவு காணப்படுகின்றது. திருமடல்களில் ''காரிஸ்மா'' என்ற சொல்லை பயன்படுத்தி விளக்க முற்பட்டது.
   1. கிறிஸ்துவின் வெறுமையாதலை விளக்குவதற்கு
   2. கொரிந்திய சபைக்கு கிறிஸ்தவ ஒற்றுமையை விளக்குவதற்கு
   3. தெசலோனிக்கேய சபையினருக்கு இரண்டாம் வருகையை விளக்குவதற்கு
   4. கொலோசைய சபையினருக்கு கிறிஸ்தவ சகோதரத்துவத்தை விளக்குவதற்கு
   5. தூய ஆவி எமக்கு அளிக்கும் விசேட அருட்கொடைகளை விளக்குவதற்கு

21) கிறிஸ்தவ ஒற்றுமை குறித்து பவுல் எழுதிய திருமடல்
   1. உரோமையர் 2. கலாத்தியர் 3. பிலிப்பியர்
   4. எபேசியர் 5. தெசலோனிக்கேயர்

22) கிறிஸ்தவர்கள் பொதுப்பாதுகாப்பின் பெயரால் துன்புறுத்தப்பட்ட கலாபனை?
   1. யூத கலாபனை 2. அரச கலாபனை 3. கொள்கைக் கலாபனை
   4. சந்தர்ப்பவாதக் கலாபனை 5. உரோமைய கலாபனை

23) A. கிறிஸ்தவர்கள் தங்கள் ஒரே கடவுளைத்தவிர வேறு தெய்வங்களுக்கு பலிசெலுத்த மறுத்தமை
   B. உலகில் நிகழும் அழிவுக்கெல்லாம் கிறிஸ்தவர்களே காரணம்
   C. திருத்தூதர்களின் போதனைகளை செவிமடுத்து அவர்கள் பின் சென்றமை

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

D. என்ன காரணத்திற்காக இயேசுவை வெறுத்தார்களோ அதே காரணத்திற்காக கிறிஸ்தவர்களையும் வெறுத்தமை.

மேற்படி கூற்றுக்களில் உரோமைய கலாபனையோடு தொடர்பான கூற்றுக்கள்.

1. ABCD 2. ACDE 3. ABE 4. BCD 5. BCDE

24) இவர் நவீன யுகத்தின் தத்துவ ஞானியாகவும் இறையியலாளராகவும் போற்றப்படுபவர்.

1. கிரஹாம்பெல் 2. ஜன்ஸ்டயின் 3. நியூட்டன்
4. பிளமிங் 5. தோமஸ் அல்வா எடிசன்

25) சத்தியத்தின் பாதுகாவலர் என அழைக்கப்படக் காரணம்

1. நம்பிக்கைக் கோட்பாடுகளை நியாயம் கூறி ஆதரித்துப் பாதுகாத்தமையால
2. நாகரிகமற்றவர்களை மனந்திருப்பியமையால்
3. இறைவனுக்குப் பிரமாணிக்கமாக வாழ்ந்தமையினால்
4. இறைசெய்தியை மக்களுக்கு போதித்தமையால்
5. மறைசாட்சிகளாக மரித்தமையால்

26) “இரும்பு மனிதன்”. “முதன்மையான பெரிய கிறிஸ்தவ எழுத்தாளர்” “இறையியல் இலத்தீன் மொழியின் தந்தை” என்று அழைக்கப்பட்ட சத்தியத்தின் பாதுகாவல்கள் முறையே

1. ஜஸ்ரின், தேர்த்தூலியன், இரனியுஸ்
2. கிளமெண்ட், தேர்த்துலியன், இரனியுஸ்
3. ஒரிஜன், ஜஸ்ரின், தேர்துலியன்
4. ஒரிஜின், கிளமெண்ட், ஜஸ்ரின்
5. இரனியுஸ், ஜஸ்ரின், தேர்துலியன்

27) • விவசாயம், கைத்தொழில் செய்வதில் மக்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி தொழிலில் மேன்மையை எடுத்துக்காட்டினர்.
• சுயநலம் பாராமல் பிறர்நலப் பணிகளில் ஈடுபட்டனர்.

இக் கூற்றுக்களுடன் தொடர்புடையவர்கள்.

1. கார்மேல் சபைத்துறவிகள் 2. அருஸ்தீனர் சபை துறவிகள்
3. பிரான்சிஸ்கன் சபைத் துறவிகள் 4. பெனடிக்ற் சபைத் துறவிகள்
5. இயேசு சபைத் துறவிகள்

28) தொடக்ககால துறவிகள் சபையினரைக் கொண்ட தொகுதி.

1. அகுஸ்தீனர் சபை, பெனடிக்ற் சபை, கார்மேல் சபை
2. பிரான்சிஸ்கள், பெனடிக்ற் சபை, இயேசு சபை
3. பெனடிக்ற் சபை, கப்புச்சின் சபை, வின்சென்டிபோல் சபை
4. குளுனிசபை, பெனடிக்ற் சபை, இயேசு சபை
5. பெனடிக்ற் சபை, குளுனிசபை, சிஸ்ரேசியன் சபை

29) கி.பி 8ஆம் நூற்றாண்டிலே ஐரோப்பிய நாடுகளில் இருந்து பேரறிஞர்களையும், கல்விமான்களையும் ஒன்று திரட்டி கலை அறிவியல் மன்றத்தை ஏற்படுத்திய பேரரசன்

1. சார்லமென் (பெரியசாள்ஸ்) 2. கொன்ஸ்தார் குளோர் 3. 7ஆம் ஹென்றி
4. 9ஆம் லூயிஸ் 5. மரியோ ஒக்ஸ்

30) திரிதெந்தின் சங்கத்தின் தீர்மானங்களை “பெனடிக்துஸ் டேயுஸ்” என்ற மடலினூடாக அங்கீகாரம் செய்த திரு அவைத் தலைவர்.

1. 3 ஆம் பவுல் 2. 4 ஆம் பவுல் 3. 12 ஆம் பத்திநாதர்
4. 6 ஆம் பவுல் 5. 5 ஆம் பவுல்

31) 18ஆம் நூற்றாண்டிலே கடவுளை அறியாதோர் மத்தியிலே நற்செய்திப் பணியாற்றும் நோக்கிலே நிறுவப்பட்ட சங்கம்

1. பப்றிஸ்ற் தூதுரைப்பு சங்கம் 2. லண்டன் தூதுரைப்பு சங்கம்
3. வெஸ்லியன் தூதுரைப்பு சங்கம் 4. அமெரிக்க தூதுரைப்பு சங்கம்
5. சபை தூதுரைப்பு சங்கம்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

32) தனது மறைபரப்பு பணியிலே "சாவில்லாத மறை உரை" என அழைக்கப்படும் மறையுரையை ஆற்றிய மறைபரப்பாளர்.
1. ஜோன் வெஸ்லி
2. றொபர்ட் றேய்க்ஸ்
3. வில்லியம் கேரி
4. யோன் றைலண்ட்
5. ஜீவர்கீஸ்

33) கிரேக்க சிந்தனைகளைக் கையாண்டு விவிலிய நூல்களை எழுதியவர்கள்
1. தூய லூக்கா, தூய பேதுரு
2. தூய மத்தேயு, தூய யோவான்
3. தூய யாக்கோபு, தூய மாற்கு
4. தூய யோவான், தூய பவுல்
5. தூய யோவான், தூய பவுல்

34) அரிஸ்ரோட்டிலின் மெய்யிலில் சிந்தனைகளின் அடிப்படையில் கிறிஸ்தவ கோட்பாடுகளை தெளிவுபடுத்தி மெய்யியல் சிந்தனையாளர்
1. தோமஸ் அக்குவினாஸ்
2. அகுஸ்தீனர்
3. அன்சலம்
4. பொன்வெஞ்சர்
5. பொனிபஸ்

35) திரு அவையின் 2 ஆம், 3 ஆம் நூற்றாண்டுகளிலே கிறிஸ்தவ விசுவாச சத்தியங்களாய் பாதுகாக்கும் நோக்கிலே தனியார் கல்விக்கூடங்களை நிறுவி மறைக்கல்வியை வழங்கிய மறை ஆசிரியர்கள்.
1. இரனேயுஸ், கிளமென்ட
2. யுஸ்ரின், ரற்சியன்
3. தேர்த்துலியன், ஒரிஜின்
4. ரற்சியன், கிளமென்ட்
5. பொலிகாப், சிப்பிரியன்

36) பின்வருவனவற்றுள் புரட்டஸ்தாந்து மறுமலர்ச்சிக்கு வித்திட்ட காரணி அல்லாதது எது?
1. திரு அவைத் தலைவர்களின் உலகியல் போக்கிலான வாழ்க்கைமுறை
2. திரு அவைக்கும், உரோமைப்பேரரசுக்கும் இடையிலான அதிகாரப் போராட்டம்
3. திரு அவைத் தலைவர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டமை
4. திரு அவையிலே திருநிலையினரின் நடத்தை பற்றிய பொதுநிலையினரின் அதிருப்தி
5. திரு அவை தனிநபர்களால் ஆட்சி செய்யப்படுவதைவிட ஆட்சி பன்முகப்படுத்தப்படல் வேண்டும் என்ற கருத்து ஏற்பட்டமை

37) ஆசியாவிலே முதல் கிறிஸ்தவ நாடு, ஐரோப்பாவிலே திரு அவையின் மூத்த மகள் என அழைக்கப்பட்ட நாடுகள் முறையே
1. பிரான்ஸ், இத்தாலி
2. உரோமை, பிரான்ஸ்
3. ஆர்மேனியா, பிரான்ஸ்
4. போலந்து, ஸ்பெயின்
5. இந்தியா, ஜேர்மனி

38) "தெய்வீக ஓவியர்" என அழைக்கப்படுபவர்
1. மைக்கல் ஆஞ்சலோ
2. லியானோ டாவின்சி
3. கியோட்டோ
4. பெர்னினி
5. இராபயல்

39) இலங்கையில் நவீன கல்வியில் நடத்தையும், அரங்கியலையும் அறிமுகப்படுத்தியவர்கள்
1. ஆங்கிலேயர்
2. ஒல்லாந்தர்
3. பாரசீகர்
4. அராபியர்
5. போர்த்துக்கேயர்

40) அருட்தந்தை பிறே விசந்தி அடிகளார் எந்த துறவற சபையை சார்ந்தவர்.
1. பிரான்சிஸ்கள் சபை
2. இயேசு சபை
3. அகுஸ்தினார் சபை
4. டொமினிக்கன் சபை
5. அமலமரித்தியாகிகள் சபை

41) சீனாவில் மறைபோதப் பணியில் முக்கிய இடத்தை வகுத்தவர் யார்?
1. தோமையார்
2. பிரான்சிஸ் சவேரியார்
3. பிறேவின்சென்ற்
4. கொஸ்மே தெறொறெஸ்
5. மத்தேயுரிச்சி அடிகளார்.

42) "கூணன் சிலுவை ஆணை" என்ற கிளர்ச்சி உருவாகிய ஆண்டு எது?
1. 1912
2. 1653
3. 1806
4. 1610
5. 1941



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

43) இயேசு சபையினர் யாருடைய தலைமையில் இலங்கைக்கு வந்தனர்.
1. பார்தோலமே சம்பாயோ
2. இக்னாசியுஸ் கொன்ஸ்தந்தினு த.கா.
3. அருட்திரு தயோகோடா குன்கவின்
4. யோண் பேர்னாண்டஸ்
5. கோஸ்மே தெரொறெஸ்

44) A. ஒரு பங்கிற்கு ஒரு பாடசாலை என்ற அடிப்படையில் அமைந்தவை
B. உயர்நிலை கல்விமுறை கடைப்பிடிக்கப்பட்டது.
C. போர்த்துக்கேய மொழியிலேயே இயங்கி வந்தன.
D. இளவரசர்கள் இங்கு கல்வி பயின்றனர்.
E. சுதேசமொழிகளில் நடத்தப்பட்டன.
மேற்படி கூற்றுக்களில் கோவிற்பற்று பாடசாலைகளுக்குப் பொருத்தமான ஆங்கில எழுத்துக்கள்
1. ABC
2. AB
3. BC
4. CDE
5. AE

45) "எம் மதத்தின் முக்கிய கட்டளைகள்" என்ற மறைக்கல்வி நூலை அச்சிட்டு வெளியிட்டவரும், இராணுவப் படையினருக்கு பணி செய்ய அனுப்பப்பட்ட குரு.
1. புனித யோசேவ்வாஸ் அடிகளார்
2. வண. பிலிப்பிஸ் பல்தேவுஸ் பாதிரியார்
3. அருட்திரு பிறேவின் செந்தே அடிகளார்
4. அருட்திரு பார்தோலமே ஜம்பாயோ
5. அருட்திரு தயோகோடா குன்கபிள்

46) ஆசியாவில் முதன்முதலில் பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட விடுதிப்பாடசாலை
1. திருக்குடும்ப கன்னியர் மடம்
2. உடுவில் மகளிர் கல்லூரி
3. சுண்டுக்குளி மகளிர் பாடசாலை
4. வேம்படி மகளிர் பாடசாலை
5. பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் பாடசாலை

47) உலக கிறிஸ்தவ சபைகளின சம்மேளனத்தில் இணைத்து கொள்ள விரும்பாத சபைகள் இணைந்து உருவாக்கின அமைப்பு
1. அமெரிக்க மிஷன் பாடசாலை
2. வாழ்வுக்கும் பணிக்குமான இயக்கம்
3. கிறிஸ்தவ கல்விக்கான உலக சங்கம்
4. உலக எவாஞ்சலிகள் கூட்டமைப்பு
5. நம்பிக்கைக்கும், ஒழுங்குக்குமான ஆணைக்குழு

48) திருத்தந்தை தூய 2 ஆம் யோண் பவுலால் எழுதப்பட்ட சமூகப் படிப்பினை சுற்று மடல்களாவன.
1. அன்னையும் ஆசிரியமும், மனிதரின் மீட்பர், அன்னையே கடவுள்
2. 100 வது ஆண்டு, அன்னையும் ஆசிரியரும், அன்பே கடவுள்
3. மனிதரின் மீட்பர், மனித உழைப்பு, திருச்சபையின் சமூக ஈடுபாடு
4. தொழிலாளர் நிலமை, அவனியில் அமைதி, மனித உழைப்பு
5. மனித உழைப்பு, இறைவனுக்கே புகழ், 100 வது ஆண்டு

49) ஆசிய கிறிஸ்தவ சம்மேளனத்தின் சமூக நோக்கங்களிலே குறிப்பிடத்தக்கது.
1. நம்பிக்கை, திருப்பணி, ஐக்கியத்தை வளர்த்தல்
2. பல சமயங்களுக்கிடையில் உரையாடலை ஏற்படுத்துதல்
3. சமய வன்முறைகளுக்கு எதிராக குரல் கொடுத்தல்
4. ஏழைகளின் வாழ்வில் அக்கறை காட்டுதல்
5. எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

50) கிறிஸ்தவ ஒன்றிப்பின் திருத்தந்தையாக கருதப்படுபவர்
1. தூய 2 ஆம் யோண்பவுல்
2. 12 ஆம் பயஸ்
3. 4 ஆம் பவுல்
4. 16 ஆம் பெனடிக்ற்
5. தூய 23 ஆம் யோவான்

✠❄✠



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் II<br>Christian Civilization II | Three Hours<br>Gr -13 (2022) | 49 | T | II |

**அறிவுறுத்தல்கள் :**

❖ பகுதி 1 இலிருந்து **இரண்டு** வினாக்களையும், பகுதி 11 இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. (i) தூய ஒரிஜின் பற்றி நான்கு விடயங்கள் தருக. (2 புள்ளிகள்)
 (ii) கிரேக்க நாகரிகத்தின் பண்புகள் நான்கினை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
 (iii) திரிதெந்தீன் சங்கத்தின் பின் தோற்றம் பெற்ற துறவற சபைகள் நான்கினை குறிப்பிட்டு அவற்றில் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)
 (iv) கிறிஸ்தவ விஞ்ஞானிகள் இருவரின் மணிகளை விளக்குக. (8 புள்ளிகள்)

02. (i) பாலஸ்தீனாவிற்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் நான்கினை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
 (ii) சீடத்துவம் பற்றிய கிறிஸ்துவின் படிப்பினைகள் நான்கினை தருக. (4 புள்ளிகள்)
 (iii) இயேசுவின் காலத்தில் யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையே நிலவிய முரண்பாடுகளை குறிப்பிடுக. (6 புள்ளிகள்)
 (iv) தூய பெனடிக் துறவற சபையினர் ஐரோப்பிய பழங்குடி மக்களை நாகரிகப்படுத்துவதில் கல்வியை சிறந்த ஊடகமாக பயன்படுத்தியிருந்தனர் இக்கூற்றினை விளக்குக. (8 புள்ளிகள்)

03. (i) இந்தியாவில் காணப்படுகின்ற கீழைத்தேய திருச்சபைகள் நான்கின் பெயர்களை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
 (ii) மத்திய காலத்தில் திருச்சபையின் ஆன்மீக சீரழிவிற்கு ஏதுவான காரணிகள் நான்கினை தருக. (4 புள்ளிகள்)
 (iii) பைசாந்திய ஆலய அமைப்பின் பாதக அம்சங்களை விபரிக்குக. (6 புள்ளிகள்)
 (iv) ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இலங்கையின் கல்வி துறையில் ஏற்பட்ட மாற்றத்தை விபரிக்குக. (8 புள்ளிகள்)

## பகுதி - II

01. (i) கத்தோலிக்க திருச்சபையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த திரிதெந்தின் பொதுசங்கம் கூட்டப்பட்டமைக்கான பின்னணியையும் அதன் தீர்மானங்களையும் விபரிக்குக.
 (ii) இன்றைய சமூக சூழ்நிலைகளில் கத்தோலிக்க விசுவாசம் தளர்ச்சியடைய முனைப்பாகக் காணப்படும் காரணங்களைக் கூறி அதனை நிவர்த்தி செய்ய உம்மால் ஆற்றக் கூடிய வழிகாட்டல்களை விளக்குக.

(10x2=20 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

02. (i) கிறிஸ்மதவ குடும்ப வாழ்வு பற்றி பவுல் தனது மடல்களில் குறிப்பிடும் கருத்துக்களை விளக்குக.

(ii) இன்றைய கிறிஸ்தவ குடும்பங்களிடையே அமைதியின்மையை விளைவிக்கும் காரணங்களைக் குறிப்பிட்டு அதனை நிவர்த்திசெய்ய பவிலினுடைய மடலில் இருந்து நீர் கூறும் வழிகாட்டல்களை குறிப்பிடுக.

(10x2=20 புள்ளிகள்)

03. (i) கி.பி *9 – 11* வரையான காலப்பகுதியில் திருச்சபையின் இருண்ட காலம் என அழைக்க காரணங்களை விளக்குக.

(ii) சமய வன்முறைகளுக்கெதிராக சமூக அமைதிக்கான செயற்பாடாகவும் உலக திருச்சபை சபைகளின் சம்மேளனம் மேற்கொள்ளும் செயற்பாடுகளை விளக்குக.

(10x2=20 புள்ளிகள்)

04. (i) இலங்கையின் ஒல்லாந்தர் காலத்தில் கல்விப்பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பது பற்றி கருத்துரைக்க.

(ii) அருட்பணி சுவாமி ஞானப்பிரகாசம் ஆற்றிய பணிகளை விபரிக்குக..

(10x2=20 புள்ளிகள்)

05. (i) கிறிஸ்தவ நாகரிகத்தின் கிரேக்க உரோம நாகரிகங்களின் செல்வாக்குகள் எவை?

(ii) கிறிஸ்தவ இறையியல் வளர்ச்சிக்கு தோமஸ் அக்குவினாஸின் பங்களிப்பினை விளக்குக.

(10x2=20 புள்ளிகள்)

06. (i) மறுமலர்ச்சி காலத்தில் சித்திர கலைஞர்களின் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துரைக்க.

(ii) இன்றைய காலத்தில் ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் வழிபாடுகள் மற்றும் ஆராதனைகளை பங்கெடுக்கும் மக்களின் விசுவாச உறுதிப்பாட்டை வளர்ப்பதற்கு ஆலயங்கள் எவ்வாறு துணை செய்கின்றன என்பது பற்றி கருத்துரை தருக.

(10x2=20 புள்ளிகள்)

07. (i) இயேசுவின் போதனை செயற்பாடுகள் அதிகமாக பரிவிரக்கத்தை அடிப்படையாக கொண்டே அமைந்திருந்தது. விளக்குக.

(ii) தற்கால சமூக சூழலில் பரிவிரக்கத்தை நீர் எவ்வாறு செயற்படுத்தலாம் என்பது பற்றி கருத்துரை தருக.

(10x2=20 புள்ளிகள்)

08. (i) பாலஸ்தீனாவின் மேற்கு மலை பகுதியின் புவியியல் சிறப்புக்களை காட்டுக.

(ii) நீர் வாழும் பிரதேசத்தில் சிறப்பான மறை அறிவிற்கு தடையாக இருக்க கூடிய காரணங்களை கூறி அதை நிவர்த்தி செய்ய நீர் மேற்கொள்ளும் செயற்பாடுகள் பற்றி கருத்துரைக்க.

(10x2=20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!